**National Workshop on Art of Writing Research Article in Commerce and Management Research held on 24-25 April, 2010 at Bharathidasan University, Trichy**

**Organiser: Dr. M. SELVAM**

**Dinamalar, Tiruchirappalli Edition, Dated: 21.04.2010, Page No.: 04**



## 'ஆராய்ச்சி கட்டுரை வெளியீடு' கருத்தரங்கம்

### பாரதிதாசன் பல்கலை.யில் ஏப்.24ல் தொடக்கம்

திருச்சி,ஏப்.21-

'வணிகவியல் மற்றும் மேலாண்மையியலில் ஆராய்ச்சி கட்டுரை வெளியீடுகள்' என்ற தலைப்பிலான இரண்டு நாள் கருத்தரங்கம் வரும் 24,25ம் தேதிகளில் திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் நடக்கிறது. இதுகுறித்து பல்கலைக்கழகத்தின் வணிகவியல் மற்றும் நிதிக்கல்வியியல் துறைத் தலைவர் பேராசிரியர் செல்வம் நிருபர்களிடம் தெரிவித்ததாவது:

உலக அளவில் கல்வித்துறையில் மாற்றங்கள் ஏற்பட்டு வரும் தற்போதைய சூழ்நிலையில் ஆசிரியர்கள் அனைவரும் தங்களது திறமைகளை வெளிப்படுத்த வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். ஒவ்வொரு ஆசிரியரும் ஆராய்ச்சியில் ஈடுபடுவதும், அதன் முடிவுகளை கட்டுரைகளாக வெளியிடுவதும் இன்றைய சூழ்நிலையில் அவசியமானதாகும்.

ஆராய்ச்சியாளர்கள் மற்றும் கல்வியாளர்களுக்குரிய திறன்களில் ஆராய்ச்சி கட்டுரைகளை இதழ்களில் வெளியிடுதல் தனித்துவம் வாய்ந்த திறனாகும். ஆனால் இந்த திறனை வளர்ப்பதில் சரியான அக்கறை செலுத்தப்படவில்லை. இந்த குறையை நிவர்த்தி செய்யும் வகையில் பாரதிதாசன் பல்கலைக்கழக வணிகவியல் மற்றும் நிதிக்கல்வியியல் துறை மற்றும் ஸ்மார்ட் மேலாண்மை இதழ் சார்பில் 'வணிகவியல் மற்றும் மேலாண்மையியலில் ஆராய்ச்சி கட்டுரை வெளியீடுகள்' என்ற தலைப்பிலான 2 நாள் பணிப்பட்டறை வரும் 24,25ம் தேதிகளில் பல்கலைக்கழக குளிர்மை அரங்கில் நடக்கிறது.

24ம் தேதி காலை தொடக்க விழாவுக்கு பல்கலை. ஆட்சிமன்றக்குழு உறுப்பினர் பேராசிரியர் அர்ச்சுனன் தலைமை வகிக்கிறார். பெல் நிறுவன பொது மேலாளர் ஆனந்தன் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு பணிப்பட்டறையை தொடங்கி வைத்து 'ஆராய்ச்சி கட்டுரை வெளியீடுகள் இக்கால தேவை' என்ற தலைப்பில் பேசுகிறார். 'ஜெர்னல் ஆன் கான்டெம்பரரி ரிசர்ச் இன் மேனேஜ்மென்ட்' என்ற இதழின் செயல் ஆசிரியரும், பி.எஸ்.ஜி மேலாண்மை நிறுவனத்தின் பேராசிரியருமான கிருஷ்ணவேணி 'எவ்வாறு ஆராய்ச்சி கட்டுரைகளை எழுதுவது' மற்றும் 'பிறரது கட்டுரைகளை மறு ஆய்வு செய்யும் திறன்' என்ற தலைப்புகளில் பங்கேற்பாளர்களுக்கு பயிற்சி அளிக்கிறார்.

'ஆராய்ச்சி கட்டுரைகளில் புள்ளியியல் கூறுகளும் அவற்றின் விளக்கங்களும்' என்ற தலைப்பில் பாரதிதாசன் மேலாண்மை நிறுவன உதவி பேராசிரியர் கண்ணதாசன் பேசுகிறார். 25ம் தேதி தகவல் வழிமுறைகளும், சிறந்த இதழ்களை கண்டறியும் வகைகளும் என்ற தலைப்பில் பாரதிதாசன் பல்கலைக்கழக நூலகர் சீனிவாச ராகவன் பேசுகிறார். பி.எஸ்.ஜி நிறுவன உதவி பேராசிரியர் விவேக் 'இதழ் ஆசிரியர்களின் எதிர்பார்ப்பும், ஆராய்ச்சி கட்டுரைகளை ஆராயும் முறைகளும்' என்ற தலைப்பில் பேசுகிறார்.

இரண்டு நாள் பணிப்பட்டறை ஆராய்ச்சி கட்டுரைகளை எழுதுவதற்கும், வெளியிடுவதற்கும் ஒரு வழிகாட்டியாக அமையும். நிறைவு விழாவுக்கு பாரதிதாசன் பல்கலைக்கழக ஆட்சி மன்றக்குழு உறுப்பினர் திரு ஞானமூர்த்தி தலைமை வகிக்கிறார். ஐ.இ.சி.டி இயக்குனர் பார்த்தசாரதி நிறைவுரையாற்றுகிறார். பல்வேறு கல்லூரி மற்றும் பல்கலைக்கழகங்களை சேர்ந்த 100க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள், ஆராய்ச்சியாளர்கள் கலந்து கொள்கின்றனர். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

**Dinamani, Tiruchirappalli Edition, Dated: 21.04.2010, Page No.: 04**



## பாரதிதாசன் பல்கலை.யில் ஏப்ரல் 24-ல் ஆய்வுக் கட்டுரை தொடர்பான பயிலரங்கம் தொடக்கம்

திருச்சி, ஏப். 20: திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் வணிகவியல் - நிதிக் கல்வியியல் துறை, ஸ்மார்ட் மேலாண்மை இதழ் சார்பில் 'வணிகவியல் - மேலாண்மையியலில் ஆய்வுக் கட்டுரை வெளியீடுகள்' பற்றிய இரு நாள் பயிலரங்கம் வருகிற 24-ம் தேதி தொடங்கவுள்ளது.

இதுகுறித்து வணிகவியல் - நிதிக் கல்வியியல் துறைத் தலைவரும், ஷ்ஸ்மார்ட்' மேலாண்மைக் கல்வி இதழின் நிறுவனர் - பதிப்பாளருமான மு. செல்வம் செவ்வாய்க்கிழமை நிருபர்களிடம் தெரிவித்தது:

'ஆராய்ச்சியாளர்கள், கல்வியாளர்களுக்குரிய திறன்களில் ஆராய்ச்சிக் கட்டுரைகளை இதழ்களில் வெளியிடுதல் தனித்துவம் வாய்ந்த திறன். ஆனால், இந்தத் திறனை வளர்ப்பதில் சரியான அக்கறை செலுத்தப்படவில்லை. தற்போது, வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களின் வருகை நம் நாட்டில் அதிகரித்து வருகின்றன.

எனவே, கல்லூரி ஆசிரியர்கள் தங்களது திறமையை வெளிப்படுத்த வேண்டிய சூழ்நிலை உருவாகியுள்ளது. மேலும், புதியனவற்றைக் கண்டுபிடிக்கும் கல்லூரி ஆசிரியர்கள் அதைக் கட்டுரையாக வெளியிட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

தவிர, கல்லூரி ஆசிரியர்கள் மேற்கொண்ட ஆராய்ச்சிகளின் அடிப்படையில்தான் அவர்களுக்குப் பதவி உயர்வு வழங்கப்படும் என பல்கலைக்கழக நிதி நல்கைக் குழு தெரிவித்துள்ளது. ஆசிரியர்கள் எந்தத் தரத்துடன் ஆய்வுக் கட்டுரைகளை வெளியிடுகிறாரோ அந்த அடிப்படையில்தான் பதவி உயர்வு என அந்த உத்தரவில் கூறப்பட்டுள்ளது.

தரமான கல்வி வழங்க வேண்டும் என்பதே இதன் நோக்கம். எனவே, ஆய்வுக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில், திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் வருகிற 24, 25-ம் தேதிகளில் இந்தப் பயிலரங்கம் நடத்தப்படவுள்ளது. இதில் ஆராய்ச்சி மற்றும் ஆராய்ச்சி இதழ் ஆசிரியர்கள் பேசவுள்ளனர்.

பல்வேறு கல்லூரிகள், பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த சுமார் 100 ஆசிரியர்கள் பயிற்சி பெற பதிவு செய்துள்ளனர். மேலும், விருப்பமுள்ளவர்கள் வந்தாலும் அனுமதிக்கப்படுவர்' என்றார் செல்வம்.

**Dailythanthi, Tiruchirappalli Edition, Dated: 21.04.2010, Page No.: 20**



## பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் 24, 25-ந் தேதிகளில் கருத்தரங்கு

திருச்சி, ஏப்.21-

திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழக வணிகவியல் மற்றும் நிதிக்கல்வியியல் துறை மற்றும் ஸ்மார்ட் மேலாண்மை இதழ் சார்பில் ''வணிகவியல் மற்றும் மேலாண்மையியலில் ஆராய்ச்சி கட்டுரை வெளியீடுகள்'' எனும் தலைப்பில் 2 நாள் கருத்தரங்கு வருகிற 24, 25 தேதிகளில் பல்கலைக்கழக குளிர்மை அரங்கத்தில் நடைபெறுகிறது. கருத்தரங்கிற்கு பல்கலைக்கழக விலங்கின அறிவியல் துறை பேராசிரியரும் ஆட்சி மன்ற குழு உறுப்பினருமான முனைவர் அர்ச்சுனன் தலைமை தாங்கி தொடங்கி வைக்கிறார். பெல் நிறுவன பொதுமேலாளர் ஆனந்தன் ஆராய்ச்சி கட்டுரைகள் வெளியீடுகள்-இக்கால தேவை என்ற தலைப்பில் பேசுகிறார். 25-ந் தேதி ஐ.இ.சி.டி இயக்குனர் முனைவர் பார்த்தசாரதி கருத்தரங்கு நிறைவு விழாவில் பேசுகிறார். இதில் கல்லூரி, பல்கலைக்கழக பேராசிரியர்கள், பல்வேறு இதழ்கள் ஆசிரியர்கள் என 100-க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொள்கின்றனர். கருத்தரங்கிற்கான ஏற்பாடுகளை வணிகவியல் மற்றும் நிதிக்கல்வியியல் துறை தலைவரும், ஒருங்கிணைப்பாளருமான முனைவர் செல்வம் செய்து வருகிறார்.